**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை – திரு. S.முகமது யூசுப் நவாஸ், B.A.,B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை**

**2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண். 40/2025**
**CNR No: TNSV08-000047-2025**

1.பெரியசாமி
2.விமலாதேவி
3.சரண்யா
4.மைனர்.கனிஷ்மா
5.மைனர். மகின் பிரணவ் ..... வாதிகள்
(மேற்படி மைனர்கள் 4, 5 வாதிகளுக்காக மேற்படியார்களின் தாயார் 3 ம் வாதி சரண்யா கார்டியன் ஸ்தானத்தில்)
**(Added as per order in IA.No.2/2025, dated 18.12.2025)**
**(Amended as per order in IA.No.3/2025, dated 05.03.2026)**

**/ எதிர் /**

1. மாவட்ட ஆட்சியர், சிவகங்கை
2.வட்டாட்சியர், மானாமதுரை ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 29.04.2025 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு கோப்புக்கு எடுக்கப்பட்டு 30.06.2025 ம் தேதியன்று வழக்கு வாய்தாவிற்கு எடுக்கப்பட்டு 20.04.2026 ம் தேதியன்று என் முன்னால் விசாரணைக்காக வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கருப்பையா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.M.துரைப்பாண்டி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**தீர்ப்புரை**

தாவா வழக்கில் இறந்துவிட்ட ராஜேஸ்வரியின் வாரிசுகளாக இந்த வாதிகள் என விளம்புகை பரிகாரமும், வாதிகளுக்கு பிரதிவாதிகளால் வாரிசு சான்றிதழ் வழங்க ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரமும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:30:08 +0530

**1) வழக்குரையின் சுருக்கம்:**

தாவா வழக்கில் 1, 2 வாதிகளின் தந்தை பெயர் கணேசன் என்றும், கணேசனின் உடன்பிறந்த சகோதரி ராஜேஸ்வரி என்றும், ராஜேஸ்வரி கடந்த 13.05.2021ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், 1ம் வாதி சிறு வயதாக இருக்கும்போதே அவரது தாயார் முத்துலெட்சுமி கடந்த 09.05.2005ம் தேதியன்றும், தந்தை கணேசன் கடந்த 30.10.2009ம் தேதியன்றும் இறந்துவிட்டார்கள் என்றும், 1ம் வாதியுடன் பிறந்த சகோதர, சகோதரி சேதுராமச்சந்திரன் மற்றும் விமலாதேவி என்றும், விமலாதேவி திருமணம் செய்து வாழ்ந்து வருவதாகவும், ராஜேஸ்வரி – ராமலிங்கம் தம்பதிகளுக்கு குழந்தை இல்லாததாலும், 1ம் வாதியின் தாய், தந்தை வாதி சிறு வயதிலேயே இறந்துவிட்டதாலும், 1ம் வாதியை ராஜேஸ்வரி – ராமலிங்கம் தம்பதிகள் கடந்த 2006ம் ஆண்டிலிருந்து வளர்த்து வந்தார்கள் என்றும், 1ம் வாதியின் பள்ளி மாற்று சான்றிதழில் இறந்துபோன ராஜேஸ்வரியே பெற்றோராக கையொப்பம் செய்துள்ளர் என்றும், கடந்த 31.08.2018ம் தேதியன்று 1ம் வாதியும், இறந்துபோன ராஜேஸ்வரியும் மானாமதுரையில் உள்ள L&T Finance Ltd நிதி நிறுவனத்தில் கடன் பெற்று 10.09.2020 வரை தவணை செலுத்தி கடனை அடைத்துள்ளனர் என்றும், மேற்படி ராஜேஸ்வரி 13.05.2021ம் தேதியன்றும், அவரது கணவர் ராமலிங்கம் 19.06.2020ம் தேதியன்றும் இறந்துவிட்டார்கள் என்றும், அவர்களது இறப்பு மற்றும் ஈமசடங்குகளை 1ம் வாதியே செய்துள்ளார் என்றும், 1ம் வாதி, 2ம் பிரதிவாதியிடம் இணையவழி மூலம் மனு செய்ததில் இறந்துபோன ராஜேஸ்வரிக்கு குழந்தை இல்லாததால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தி மனு மறுக்கப்பட்டதாகவும், இறந்துபோன ராஜேஸ்வரியின் பெயரிலுள்ள சொத்துக்களுக்கு பெயர் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது என்றும், எனவே இறந்துபோன ராஜேஸ்வரிக்கு இந்த வாதிகள் வாரிசுகள் என விளம்புகை செய்ய கோரியும், அவ்வாறே வாதிகளுக்கு பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் வழங்க செயலுறுத்துக் கட்டளை பரிகாரமும் கோரியும் வாதிகளால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

பிராதில் குறிப்பிட்டுள்ள விசயங்களை இந்த பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர பிறயாவற்றையும் வாதிகளே நிரூபிக்க கடமைபட்டுள்ளார்கள் என்றும், இறந்துபோன ராஜேஸ்வரிக்கு எவ்வித

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:30:23 +0530

குழந்தை பேறுகளும் இல்லை, கணவரும் இல்லை என்றும், ராஜேஸ்வரியின் தாய், தந்தையரும் இறந்துள்ளனர் என்றும், இறந்த ராஜேஸ்வரியின் உடன்பிறந்த சகோதரர் கணேசன் என்பவர் வாதியின் தந்தை என்றும், அவரும் இறந்துவிட்டதால் வேறு யாரும் வாரிசாக இல்லாத நிலையில், வாதி நேரடி வாரிசாக இல்லாததாலும், இரண்டாம் நிலை வாரிசுதாரர் என்பதாலும் உரிய நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டதாகவும், சமூக நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் வாதிகளுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க 2 ம் பிரதிவாதி தயாராக உள்ளதாகவும், வாதிகள் உரிய சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யாதபட்சத்தில் தாவா வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3)** வாதிகள் தரப்பில் சாட்சியாக 1 ம் வாதி பெரியசாமி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும், அவரின் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2 ம் வாதி விமலாதேவி என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டும், அவரின் மூலம் வா.சா.ஆ.11 சான்றாவணமும், முத்துராமலிங்கம் என்பவர் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டும், அவரின் மூலம் வா.சா.ஆ.12 சான்றாவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் இல்லை.

**4) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய எழுவினா யாதெனில்,**

| | |
|---|---|
| 1 | Whether the plaintiff is only Legal Heir of the Deceased Rajeswari? |
| 2 | Whether the plaintiff is entitled to get a relief of Declaration as prayed for ? |
| 3 | Whether the plaintiff is entitled to get a relief of Mandatory Injunction as prayed for ? |
| 4 | To what other relief ? |

**5) எழுவினா 1-க்கான தீர்வு: Whether the plaintiff is only Legal Heir of the Deceased Rajeswari?**

**5.1)** வாதிகள் தரப்பில் 1 வது சாட்சியாக 1 ம் வாதி பெரியசாமி விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் தனது

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:30:32 +0530

தந்தை கணேசனின் உடன்பிறந்த சகோதரி ராஜேஸ்வரி என்றும், தனது அத்தை ராஜேஸ்வரி 13.05.2021ம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், தான் சிறு வயதாக இருக்கும்போதே தனது தாய், தந்தையர் இறந்துவிட்டார்கள் என்றும், தன்னுடன் பிறந்த சகோதரன் சேதுராமச்சந்திரன் மற்றும் சகோதரி விமலாதேவி என்றும், ராஜேஸ்வரி – ராமலிங்கம் தம்பதிகளுக்கு குழந்தை இல்லாததாலும், தனது பெற்றோர் தனது சிறுவயதிலேயே இறந்து விட்டதாலும், 1ம் வாதியை ராஜேஸ்வரி – ராமலிங்கம் தம்பதிகள் கடந்த 2006ம் ஆண்டிலிருந்து வளர்த்து வந்ததாகவும், ராஜேஸ்வரி 13.05.2021ம் தேதியன்றும், அவரது கணவர் ராமலிங்கம் 19.06.2020ம் தேதியன்றும் இறந்துவிட்டபோது அவர்களது இறப்பு மற்றும் ஈமசடங்குகளை 1ம் வாதியே செய்ததாகவும், 1ம் வாதி, 2ம் பிரதிவாதியிடம் இணையவழி மூலம் மனு செய்ததில் இறந்துபோன ராஜேஸ்வரிக்கு குழந்தை இல்லாததால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு மனு மறுக்கப்பட்டதாகவும், எனவே இறந்துபோன ராஜேஸ்வரிக்கு இந்த வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5.2)** பிரதிவாதிகள் தரப்பில் இறந்துபோன ராஜேஸ்வரிக்கு எவ்வித குழந்தையும் இல்லை, கணவரும் இல்லை என்றும், ராஜேஸ்வரியின் தாய், தந்தையரும் இல்லை என்றும், இறந்துபோன ராஜேஸ்வரிக்கு வேறு யாரும் வாரிசுகள் இல்லாத நிலையிலும், வாதிகள் நேரடி வாரிசாக இல்லாததாலும், இரண்டாம் நிலை வாரிசுதாரர்கள் என்பதால் வாதிகள் வாரிசு சான்று கோரிய மனு நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5.3)** வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.1– லிருந்து ராஜேஸ்வரி என்பவர் 13.05.2021ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கட்டிக்குளம் கிராமத்தில் தெற்கு தெருவில் இறந்துவிட்டதற்காக 07.06.2021ம் தேதியன்று கட்டிக்குளம் கிராம ஊராட்சியில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் என்பது தெளிவாகிறது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:30:44 +0530

5.4) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.2–லிருந்து 1ம் வாதி முறையாக உரிய அதிகார அமைப்பை அணுகி வாரிசு சான்றிதழ் கோரியுள்ள நிலையில், இறந்துபோன ராஜேஸ்வரிக்கு வாதிகள் நேரடி வாரிசுகள் இல்லை என்பதால் அவர்கள் அந்த மனுவை 27.07.2022ம் தேதியன்று நிராகரித்துள்ளது தெளிவாகிறது.

5.5) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.3–லிருந்து 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை என்பதும், அதில் 1ம் வாதியின் தகப்பனார் பெயர் கணேசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் தெளிவாகிறது.

5.6) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.4–லிருந்து இறந்துபோன ராஜேஸ்வரி என்பவர் 31.08.2018ம் தேதியன்று L&T நிதி நிறுவனத்தில் கடன் பெற்று தவணை தொகை செலுத்தியதற்கான கணக்கு விபர பட்டியல் என்பது தெளிவாகிறது.

5.7) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.5–லிருந்து 1, 2 வாதிகளின் தகப்பனார் கணேசன் என்பவர் 30.10.2009ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கட்டிக்குளம் கிராமத்தில் இறந்துவிட்டதற்காக 02.06.2025ம் தேதியன்று மானாமதுரை சார்பதிவாளரால் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் என்பது தெளிவாகிறது.

5.8) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.6–லிருந்து 10.05.2010ம் தேதியன்று 1, 2 வாதிகளின் தகப்பனார் இறந்துபோன கணேசன் என்பவரின் வாரிசு சான்று என்பதும், அதில் அவரது வாரிசுகளாக தாயார் ராஜம்மாள் மற்றும் கணேசனின் மக்களான விமலாதேவி, சேதுராமச்சந்திரன், பெரியசாமி ஆகியோர் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளதும் தெளிவாகிறது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:30:54 +0530

5.9) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.7–லிருந்து 1, 2 வாதிகளின் தாயார் முத்துலெட்சுமி என்பவர் 29.05.2005 ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கட்டிக்குளம் கிராமத்தில் இறந்துவிட்டதற்காக 06.09.2018 ம் தேதியன்று மானாமதுரை சார்பதிவாளரால் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் என்பது தெளிவாகிறது.

5.10) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.8–லிருந்து இறந்துபோன ராஜேஸ்வரியின் கணவர் ராமலிங்கம் என்பவர் 19.06.2020 ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கட்டிக்குளம் கிராமத்தில் இறந்துவிட்டதற்காக 08.07.2020 ம் தேதியன்று கட்டிக்குளம் கிராம ஊராட்சியில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் என்பது தெளிவாகிறது.

5.11) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.9–லிருந்து இறந்துபோன ராஜேஸ்வரியின் தாயார் ராஜம்மாள் என்பவர் 17.09.2014 ம் தேதியன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கட்டிக்குளம் கிராமத்தில் இறந்துவிட்டதற்காக 05.10.2014 ம் தேதியன்று கட்டிக்குளம் கிராம ஊராட்சியில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் என்பது தெளிவாகிறது.

5.12) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.10–லிருந்து 1 ம் வாதியின் சகோதரர் சேதுராமசந்திரன் என்பவர் 14.12.2020 ம் தேதியன்று மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இறந்துவிட்டதற்காக 29.12.2020 ம் தேதியன்று மதுரை மாநகராட்சியில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் என்பது தெளிவாகிறது. அதில் அவரது தகப்பனார் பெயர் கணேசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:31:05 +0530

5.13) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.11–லிருந்து 2ம் வாதி விமலாதேவி என்பவரின் ஆதார் அடையாள அட்டை என்பதும், அதில் அவரது தகப்பனார் பெயர் கணேசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் தெளிவாகிறது.

5.14) வாதிகள் தரப்பு சான்றாவணம் வா.சா.ஆ.12–லிருந்து வா.சா.3 முத்துராமலிங்கம் என்பவரின் ஆதார் அடையாள அட்டை என்பது தெளிவாகிறது.

5.15) இவ்வழக்கை பொறுத்தவரை இறந்துபோன ராஜேஸ்வரியின் கணவர் ராமலிங்கம் இறந்துவிட்ட நிலையில், மேற்படியார்களுக்கு குழந்தை இல்லாததாலும், ராஜேஸ்வரியின் பெற்றோர் இறந்துவிட்ட நிலையிலும், வாதிகள் இறந்துபோன ராஜேஸ்வரியின் உடன்பிறந்த சகோதரர் கணேசனின் வாரிசுகள் என்பதால், இவ்வழக்கில் வாதிகள் இறந்துபோன ராஜேஸ்வரியின் நேரடி வாரிசுகளாக வரமாட்டார்கள். அதேசமயம் வாதிகள் தாக்கல் செய்த சாட்சிய, சான்றாவணங்களின் மூலம் இவ்வழக்கில் தீர்வு காணப்படுகிறது.

5.16) மேற்கண்ட வாதிகள் தரப்பு சாட்சியங்களை ஊர்ஜிதப்படுத்தும் (**Corroboration**) வகையில் வா.சா.1, வா.சா.2ன் சாட்சியங்களை ஒத்தே வா.சா.3ன் வாய்மொழி சாட்சியம் அமைந்துள்ளது.

5.17) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையிலும், வாதிகள் தரப்பு வாதத்தின் அடிப்படையிலும், இறந்துபோன ராஜேஸ்வரிக்கு வாதிகளை தவிர வேறு இரண்டாம் நிலை வாரிசுதாரர்கள் இல்லை என்ற சாட்சியத்தின் அடிப்படையிலும், (Hindu Succession Act) இந்து வாரிசுரிமை சட்டப்பிரிவு 14 மற்றும் பிரிவு 8ன் படி இறந்துபோன ராஜேஸ்வரியின் கணவர் ராமலிங்கம் இறந்துவிட்ட நிலையிலும், இறந்துபோன ராஜேஸ்வரி–ராமலிங்கம் தம்பதிகளுக்கு குழந்தைகள் இல்லாத நிலையிலும், வாதிகளின் வழக்கு படி

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:31:14 +0530

வாதிகளை தவிர வேறு இரண்டாம் நிலை வாரிசுதாரர்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதிகள் தரப்பு சாட்சிய, சான்றாவணங்களின் படி இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

**5.18)** இவ்வழக்கில் இறந்துபோன ராஜேஸ்வரியின் கணவர் ராமலிங்கம் என்பவர் 19.06.2020ம் தேதியன்று இறந்துவிட்டது வா.சா.ஆ.8–லிருந்து தெளிவாகிறது. மேலும் அவர்களுக்கு குழந்தை இல்லாததால் வாரிசு சான்று வழங்க இயலாது என்று உரிய அதிகார அமைப்பின் விசாரணைக்கு பிறகு வாதிகளின் மனுவை நிராகரித்துள்ளதாக வா.சா.ஆ.2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து இறந்துபோன ராஜேஸ்வரிக்கு குழந்தைகள் இல்லை என்பது தெளிவாகிறது.

**5.19)** வாதிகளின் தந்தை கணேசன் என்பவர் 30.10.2009ம் தேதியன்று இறந்துவிட்டது வா.சா.ஆ.5–லிருந்து தெளிவாகிறது. 1, 2 வாதிகளின் தந்தையும், ராஜேஸ்வரியின் சகோதரருமான கணேசன் வாதிகள் தரப்பு வழக்கு படி இறந்துபோன ராஜேஸ்வரியின் உடன்பிறந்தவர் கணேசன் மட்டுமே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**5.20)** மேலும் கணேசனின் வாரிசுகளாக தாயார் ராஜம்மாள் மற்றும் கணேசனின் மக்களாக விமலாதேவி, சேதுராமச்சந்திரன், பெரியசாமி ஆகியோர்கள் உள்ளதாக வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ.6–லிருந்து தெரியவருகிறது. மேலும் கணேசனின் தாயார் ராஜம்மாள் என்பவர் 17.09.2014ம் தேதியன்று இறந்துவிட்டது வா.சா.ஆ.9–லிருந்து தெரியவருகிறது.

**5.21)** மேலும் கணேசனின் மகனான சேதுராமச்சந்திரன் என்பவர் 14.12.2020ம் தேதியன்று இறந்துவிட்டது வா.சா.ஆ.10–லிருந்து தெரியவருகிறது. சேதுராமச்சந்திரனின் வாரிசுகளான 3 முதல் 5 வாதிகள் இடையீட்டு மனு எண்.2/2025 மனுவின் படி இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:31:22 +0530

**5.22)** மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வாதிகளும் இறந்துபோன ராஜேஸ்வரியின் இரண்டாம்நிலை வாரிசுகள் என்பது தெளிவாகிறது. **எனவே வாதிகளும் இறந்துபோன ராஜேஸ்வரிக்கு சட்டப்படியான இரண்டாம்நிலை வாரிசுதாரர்கள் என்று இந்த 1ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.**

**6)** **எழுவினா 2-க்கான தீர்வு: Whether the plaintiff is entitled to get a relief of Declaration as prayed for ?**

மேற்கண்ட 1ம் எழுவினாக்கான விடையின் அடிப்படையில் வாதிகளும் **இறந்துபோன ராஜேஸ்வரியின் இரண்டாம்நிலை வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் பெற அருகதை உடையவர்கள் என்று இந்த 2ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.**

**7)** **எழுவினா 3-க்கான தீர்வு: Whether the plaintiff is entitled to get a relief of Mandatory Injunction as prayed for ?**

வாதிகள் மேற்படி பரிகாரத்தை பொறுத்து வாதிகளுக்கு தாவா வழக்கில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க முடியுமா என்பதை பார்க்கும் பொழுது பிரிவு 39 குறித்த வகை நிவாரணச்சட்டத்தின் படி சட்டப்படியான கடமை 2ம் பிரதிவாதிக்கு இருந்தால் மட்டுமே மேற்படியான பரிகாரத்தை வழங்க முடியும்.

> “Section 39 of The Specific Relief Act deals with the relief of Mandatory Injunction, it states as "When, to prevent the breach of an obligation, it is necessary to compel the performance of certain acts which the court is capable of enforcing, the court may in its discretion grant an injunction to prevent the breach complained of, and also to compel performance of the requisite acts." Mandatory Injunctions are contemplated under section 39 of the Specific Relief Act, and is granted where it is necessary to prevent the breach of an obligation of the erring party, and the party may be compelled to perform certain acts. Such Injunction can be granted under following circumstances:

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:31:33 +0530

1. There must be an obligation on part of the defendant to perform certain acts the breach of which, must be alleged by the plaintiff.
2. Such relief must be enforceable by the court.

மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் In V.Kamatchi Vs State of Tamilnadu and others (C.R.P.NPD.No.2421 of 2012) of the Hon'ble High Court held that "...It is a well settled proposition of law that the legal heir ship certificates issued by the Tahsildar are not under any statute and he is also not the competent authority, legally. Only for administrative purpose, they are issuing such certificates, over which, the Courts are not concerned. Whenever there arises any dispute, such legal heirship certificates issued by the Tahsildar are having no back up of the law. As such, that prayer has to be deleted...”

மேற்சொன்ன மாண்புமிகு உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புரை மற்றும் பிரிவு 39 குறித்த வகை நிவாரணச்சட்டத்தின் படி 2ம் பிரதிவாதிக்கு சட்டப்படியான கடமை இருக்கிறது என்று இந்நீதிமன்றத்தால் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க முடியாது. எனவே **வாதிகள் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து வாதிகளுக்கு எதிராக இந்த 3ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.**

**8. எழுவினா 3-க்கான தீர்வு: To what other relief ?**

முக்கிய பரிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதால், வேறு வகையான பரிகாரங்கள் தேவையில்லை.

*"மேற்கண்ட விவாதங்களிலிருந்தும், சாட்சிய சான்றவாணங்களிலிருந்தும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு.101ன் படி வாதிகள் தாங்கள் கூறிய பொருண்மைகளை நிருபித்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது."*

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:31:42 +0530

*“இந்திய சாட்சிய சட்டம் பிரிவுகள். 101, 103, 106 ஆகிய பிரிவுகளின் கீழ் வாதிகள் தங்களது வழக்கை நிரூபித்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.”*

**முடிவாக, 1 முதல் 5 வாதிகளும் இறந்துபோன ராஜேஸ்வரியின் சட்டப்படியான 2ம் நிலை வாரிசுதாரர்கள் என விளம்புகை செய்து இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டும்,**

**வாதிகள் கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து இவ்வழக்கு பகுதியாக தள்ளுபடி செய்யப்பட்டும் தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:31:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 – பெரியசாமி (1ம் வாதி)
வா.சா.2 – விமலாதேவி (2ம் வாதி)
வா.சா.3 – முத்துராமலிங்கம்

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 13.05.2021 | ராஜேஸ்வரி என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.2 | 27.07.2022 | 1ம் வாதி வாரிசு சான்றிதழ் கோரிய மனுவினை 2ம் பிரதிவாதி நிராகரித்தற்கான Status Report இணையதள நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | --- | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.4 | 31.08.2018 | L&T நிதி நிறுவனத்தின் கடன் தவணை தொகை செலுத்திய கணக்கு விபர பட்டியல் அசல் |
| வா.சா.ஆ.5 | 30.10.2009 | 1, 2 வாதிகளின் தந்தை கணேசன் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.6 | 10.05.2010 | 1, 2 வாதிகளின் தந்தை கணேசன் என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.7 | 29.05.2005 | 1, 2 வாதிகளின் தாயார் முத்துலெட்சுமி என்பவரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 19.06.2020 | ராஜேஸ்வரியின் கணவர் ராமலிங்கம் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.9 | 17.09.2014 | ராஜேஸ்வரியின் தாயார் ராஜம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.10 | 14.12.2020 | 1, 2 வாதிகளின் சகோதரர் சேதுராமசந்திரன் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.11 | --- | வா.சா.2-விமலாதேவியின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.12 | --- | வா.சா.3- முத்துராமலிங்கத்தின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் – இல்லை**

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை**

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2026.04.22 18:32:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**District Munsif Court**

**Manamadurai**

**OS.No. 40/2025**

**Fair / Draft Judgment**

**Dated 22.04.2026**